7th December 1961]

Medical examination of students

*2147 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

மாணவர்களை பரிசோதிக்க mobile medical van ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

The Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Works) Act

*2148 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பீடி தொழிற்சாலை சட்டத்தின் 3, 4-வது பிரிவுகளும், அதன் உப-பிரிவுகளும் அமுல் நடத்துவதற்காக சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(இ) சட்டத்தின் 2 (g) பிரிவுபடியும், 2 (g) (ii) பிரிவுபடியும் பீடி தொழிற்சாலை முதலாளிகள்மீதும் கூட்டாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(உ) இல்லையென்றால் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) All the Inspectors and Assistant Inspectors of Labour have been instructed to enforce the provisions of sections 3 and 4 of the Act strictly.

(இ) & (உ) It is not feasible to take collective action against the proprietors of beedi factories under sections 2 (*g*) and 2 (*g*) (ii) of the Act, as it could not be established that they alone were having the ultimate control of the affairs of the beedi industrial premises, and consequently, they could not be deemed to be the employers for the purpose of section 2 (*g*) of the Act.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பீடி தொழிலாளர்களுக்காக வேண்டி நிறைவேற்றப்பட்ட சட்டத்தை இரண்டு வருஷத்திற்கு பிறகுகூட நிறைவேற்ற முடியாத அளவுக்கு ஒரு நிலைமை இருப்பதன் காரணமாக, இந்த மாதத்திலேகூட வேலூரிலே வி. அப்துல் ஜப்பார் பீடித் தொழிற்சாலையிலே ஆயிரம் பேருக்கு மேல் வேலை இல்லாத அளவுக்கு காண்ட்ராக்ட் முறையிலே மாற்றப்பட்டிருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, இந்த 2 (ஜி) பிரிவு, மற்றப் பிரிவுகள் ஆகிய முக்கியமானவைகளை தொழிலாளர்கள் நலனுக்காக உடனடியாக அமுலுக்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எதெது அமுலுக்கு கொண்டு வரப்படவேண்டுமோ, அவைகள் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுத்தான் வருகிறது.